

நாமக்கல் மேற்கு மாவட்டம் பரமத்திவேலூர், கபிலர்மலை ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு தி.மு.க மற்றும் கூட்டணி கட்சிகள் சார்பில் எல்.பி.ஜி சிலிண்டர் தட்டுப்பாடு மற்றும் மத்திய அரசின் நிதி புறக்கணிப்பை கண்டித்து நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ். மூர்த்தி கலந்து கொண்டு ஒன்றிய அரசைக் கண்டித்தும் அதற்கு துணை போகும் கூட்டணிக் கட்சிகளைக் கண்டித்தும் கோஷங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டம் நடத்தினார். இந்த ஆர்ப்பாட்டத்தில் ஒன்றிய செயலாளர்கள் தன்ராஜ்,லலித் குமார் சாமிநாதன், தளபதி சுப்பிரமணி, , சரவணகுமார், கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.


### கும்பகோணம் மாநகரில் அரசு தலைமை மருத்துவமனைக்கு

# ரூ 1.70 கோடி மதிப்பில் புதிய எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கட்டிடம்!

## சு.கல்யாணசுந்தரம் எம்.பி. தகவல்!

தஞ்சாவூர், மார்ச் 18 -

கழக நிர்வாகிகள் நிர்வாகித்து வரும் கும்பகோணம் பரஸ்பர ஸகாயநிதி நிறுவனத்தின் சார்பில் கும்பகோணம் அரசு தலைமை மருத்துவமனைக்கு ரூ 1.70 கோடி மதிப்பில் புதிய எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கட்டிடம் கட்டப்பட்டுள்ளதாக நிதி நிறுவன தலைவர் சு.கல்யாண சுந்தரம் எம்.பி. தெரிவித்துள்ளார்.



தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் மாநகரில் அமைந்துள்ள 122 ஆண்டுகள் பழமை வாய்ந்த, தற்போது நான் (சு.கல்யாண சுந்தரம் எம்.பி.) தலைவராக பொறுப்பு வகிக்கும் கும்பகோணம் பரஸ்பர ஸகாயநிதி நிறுவனத்தின் சார்பில் கும்பகோணம் மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு எம்.ஆர்.ஐ ஸ்கேன் மையம் அமைக்க நிதி நிறுவனத்தின் மூலம் சமூக நீதி முன்னெடுப்பிற்காக (CSR) நிதியிலிருந்து ரூ.1.70 கோடி வழங்கப்பட்டு அதில் எம்.ஆர்.ஐ ஸ்கேன் அமைக்க கட்டிடம் கட்டும் பணிக்கு இடம் தேர்வு செய்யப்பட்டு பணி தொடங்கப்பட்டுள்ளது.

கும்பகோணம் பரஸ்பர நிதி நிறுவனம் மூலம் ஏற்கனவே கும்பகோணம் அரசு மருத்துவமனை வளாகத்தில் புதிய காத்திருப்பு கூடம், அவசரகால மருத்துவ ஊர்தி, பள்ளிக் கட்டிடங்கள் உள்ளிட்ட பல்வேறு மக்கள் பணிகளை தொடர்ந்து செய்து வருகிறோம் .

அதனை தொடர்ந்து தற்போது எம்.ஆர்.ஐ ஸ்கேன் கட்டிடம் கட்ட ரூ.1.70 கோடி வழங்கியுள்ளோம்.

இவ்வாறு மாநிலங்களவை உறுப்பினரும், நிதிநிறுவனத்தின் தலைவருமான சு.கல்யாணசுந்தரம் தெரிவித்துள்ளார்.

### ரயில்வே: சொற்ப நிதி ஒதுக்கீடு

# 4.5 லட்சம் கோடி ரூபாய் கடன் மோசமான உள்கட்டமைப்பு!

## மக்களவையில் ஒன்றிய அரசின் மீது கே.இ.பிரகாஷ் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, மார்ச் 18 -

மக்களவையில் நடைபெற்ற ரயில்வே மானியக்கோரிக்கை மீதான விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ரயில்வே துறையில் ஒன்றிய அரசு நிகழ்த்தி வரும் நிர்வாகச் சீர்கேடுகளையும், மாற்றாந்தாய் மனப்பான்மையோடு தமிழ்நாடு புறக்கணிக்கப்படுவதையும் கடுமையாக சாடிப் பேசினார். தமிழ்நாடு முதலமைச்சரின் தலைமையில் தொடர் போராட்டம் நடத்தி, தமிழ்நாடு தனது உரிமைகளை மீட்கும் என்று அவர் சூளுரைத்தார்.

ஒன்றிய நிதியமைச்சரின் பட்ஜெட் உரையில் 'ரயில்வே' என்ற சொல்லே இடம்பெறாதது இந்த அரசின் அலட்சியத்தை உணர்த்தும் ஆதாரம் என்று குறிப்பிட்ட அவர், ரயில்வே உள்கட்டமைப்புச் செலவுகள் 66% உயர்ந்துள்ள நிலையில், நிதி ஒதுக்கீடு வெறும் 8.5% மட்டுமே அதிகரிக்கப்பட்டுள்ளது என்று குற்றம் சாட்டினார். மேலும், ரயில்வே துறையை 4.5 லட்சம் கோடி ரூபாய் கடனில் தத்தளிக்க விட்டு விட்டு, ரயில் நிலையங்களில் சாதனைப் பதாகைகளை வைப்பது அர்த்தமே இல்லாதது என்று அவர்



ஒன்றிய அரசை சாடினார்.

சாமானிய மக்கள் பயன்படுத்தும் ஸ்லீப்பர் மற்றும் இரண்டாம் வகுப்பு பெட்டிகளில் இடவசதி வெறும் 1.2% மட்டுமே உயர்ந்துள்ளதால் மக்கள் கழிவறை வாசலில் அமர்ந்து பயணிக்கும் அவலநிலை தொடர்வதாக அவர் குற்றம் சாட்டினார். 'டிஜிட்டல் இந்தியா' என்று நாடகமாடும் ஒன்றிய அரசு, காகிதப்பதிவேட்டில் புகார் எழுதும் வழக்கம் உட்பட ரயில்வேயை இன்னும் பழங்காலத்திலேயே வைத்திருப்பதாகவும், உணவின் தரம் குறித்த புகார்களை தொடர்ச்சியாக தட்டிக்கழிப்பதாகவும் அவர் காட்டமாக விமர்சித்தார்.

ஈரோடு தொகுதி மற்றும் கொங்கு மண்டலத்தின் நீண்டகால ரயில்வே கோரிக்கைகளை முன்வைத்து பேசிய திரு. கே.இ.பிரகாஷ் எம்.பி அவர்கள், குமாரபாளையம் வழியாக ஈரோடு நாமக்கல் இடையே நேரடி ரயில் பாதை அமைக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். அதேபோல், கோயம்புத்தூர் ஈரோடு இடையிலான MEMU ரயிலை கரூர் மற்றும் நாமக்கல் வழியாக சேலம் வரை நீட்டிக்க வேண்டும் என்றும், ஈரோடு -திருப்பூர் வழித்தடத்தில் கூடுதல் பயணிகள் ரயில்களை இயக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

தமிழ்க்கடவுள் முருகனின் மீது திடீர் பாசம் வந்து வேல் யாத்திரை உள்ளிட்ட விளம்பரங்களை காட்டும் ஒன்றிய அரசு, ஈரோடு - பழனி நேரடி ரயில் சேவையைத் தொடங்காதது பக்தர்களையும் பொதுமக்களையும் ஏமாற்றும் செயல் என்று அவர் சாடினார். ரயில்வே துறையும் தேசிய நெடுஞ்சாலைத் துறையும் ஒருங்கிணைவு இல்லாமல் திட்டங்களை முடக்குவதாக குறிப்பிட்ட அவர், வெள்ளக்கோயில் சங்ககிரி ROAD OVER BRIDGE உள்ளிட்ட நிலுவையில் உள்ள பணிகளுக்கு உடனடி அனுமதி வழங்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகள் மீது தாமதமில்லாமல் உடனடியாக நடவடிக்கை எடுக்கும் வகையில் 'எம்.பி-க்கள் கோரிக்கை தீர்வுக் குழு' அமைக்க வேண்டும் என்றும், இந்தியாவின் இன்றியமையாத ரயில்வே துறையில், அலட்சியம், நிர்வாகக் குளறுபடிகள் மற்றும் மாநிலங்கள் மீது பாகுபாட்டுக்கு இடம் கொடுக்காமல் ஒன்றிய அரசு செயல்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

வருகிற 2026 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் நடைபெறும் சட்டமன்ற தேர்தலில் மீண்டும் எங்களுடைய தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்கள் வென்று ஒன்றிய அரசிடம் போராடி தமிழ்நாட்டின் உரிமையை மீட்போம் காப்போம். வாழ்க தமிழ்! வளர்க தமிழ்நாடு! என்று கூறி, அவர் தனது உரையை நிறைவு செய்தார்.



கழகத் தலைவர் , தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையை ஏற்று சேலம் கிழக்கு மாவட்டம் தலைவாசல் தெற்கு ஒன்றியம் வீரகனூர் பேரூர் அ.ம.மு.க, செயலாளர் வெங்கடேசன், அ.ம.மு.க, ஒன்றிய மாணவரணி செயலாளர் சுரேஷ், அ.ம.மு.க, ஒன்றிய தகவல் தொழில்நுட்ப பிரிவு துணை செயலாளர் ஆனந்த் பாபு, அ.ம.மு.க, கிளை செயலாளர்கள் ராஜசேகர், செந்தில் குமார் ஆகியோர் அக்கட்சியிலிருந்து விலகி கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் எம்.பி. முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். அப்போது தெற்கு ஒன்றிய செயலாளர் பி.ஜி. அழகுவேல் உடனிருந்தார்.



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் அங்கம் வகிக்கும் தேசிய முற்போக்கு திராவிடர் கழக திருவாரூர் மாவட்ட நிர்வாகிகள் மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணனைச் சந்தித்து ஆலோசனைகள் மேற்கொண்டனர் . உடன் ஒன்றிய செயலாளர் ஆர். பாலச்சந்திரன், மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### ஓய்வு பெற்ற அரசு அதிகாரிகளுக்கே மீண்டும் பதவி!

# எந்த அளவுகோலில் நீட்டிப்பு? ஒன்றிய அரசின் நடைமுறை என்ன?

## மாநிலங்களவையில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கேள்வி!



நாமக்கல், மார்ச் 18 -

ஒன்றிய அரசு அதிகாரிகளுக்கு ஓய்வு வயதைத் தாண்டியும் பதவிக்காலம் நீட்டிப்பு வழங்கப்படுவது மற்றும் ஓய்வுக்குப் பிறகு மீண்டும் பணியில் அமர்த்தப்படுவது தொடர்பாக மாநிலங்களவையில் கே.ஆர். என். இராஜேஸ்குமார் கேள்வி எழுப்பினார்.

மாநிலங்களவையில் கே.ஆர்.என். இராஜேஸ்குமார் கலந்துகொண்டு ஒன்றிய அரசிடம் எழுப்பிய கேள்வியில், கடந்த ஐந்து ஆண்டுகளில் நிர்ணயிக்கப்பட்ட ஓய்வு வயதைத் தாண்டி பதவிக்காலம் நீட்டிக்கப்பட்ட அல்லது ஓய்வுபெற்ற பிறகு மீண்டும் பணியில் அமர்த்தப்பட்ட ஒன்றிய அரசு அதிகாரிகள் எத்தனை பேர் உள்ளனர். மேலும், ஆண்டு வாரியாக அதன் விவரங்களையும் வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

அத்துடன், இவ்வாறு பதவிக்காலம் நீட்டிக்கப்பட்ட அதிகாரிகள் எந்தெந்த பதவிகளில் பணியாற்றினர், அவர்கள் பணியாற்றிய காலம், வழங்கப்பட்ட சேவை நீட்டிப்பு காலம் என்ன என்பதையும், ஓய்வுக்குப் பிறகு மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டிருந்தால் அவர்கள் தற்போது வகிக்கும் புதிய பதவிகள் குறித்த தகவல்களையும் அளிக்குமாறு கேள்வி எழுப்பினார்.

மேலும், இத்தகைய பதவிக்கால நீட்டிப்பு அல்லது மறுபணியமர்த்தல் வழங்கப்படுவதற்கு ஒன்றிய அரசு எந்த அளவுகோல்களைப் பயன்படுத்துகிறது என விளக்கம் அளிக்க வேண்டும் என அவர் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்து பேசிய பணியாளர், பொது மக்கள் குறைகள் மற்றும் ஓய்வூதிய அமைச்சகத்தின் இணை அமைச்சர் மற்றும் பிரதமர் அலுவலக இணை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், ஓய்வு வயதைத் தாண்டி சேவை நீட்டிப்பு வழங்குதல் அல்லது ஓய்வுக்குப் பிறகு மறுபணியமர்த்தல் செய்வது தொடர்பான விவகா ரங்கள் சம்பந்தப்பட்ட அமைச்சகங்கள் மற்றும் துறைகளால் பரிசீலிக்கப்பட்டு தீர்மானிக்கப்படுகின்றன.

மேலும், இத்தகைய முடிவுகள் அடிப்படை விதிகளில் உள்ள நடைமுறைகளின் படி, சில விசேஷ சூழ்நிலைகளில் பொதுநலன் கருதி எடுக்கப்படுகின்றன என்று அவர் விளக்கமளித்தார்.

# ஞானபீடம் – கலைஞர் நினைவிடம்!



ஐயா!

வழக்கமாய்
உங்கள் பீடத்திற்கு
மலர் கொண்டுவருவேன்;
இன்று ஞானபீடம்
கொண்டு வந்திருக்கிறேன்

உங்கள்
தலைமாட்டில் வைத்துத்
தலை வணங்குகிறேன்
எப்போதும் எனக்கொரு
பொன்னாடை போர்த்துவீர்கள்;

இப்போது இல்லை

பொன்னாடைக்கு மாறாக
ஒரு பூ எடுத்துக்கொள்கிறேன்

கண்ணீரோடு...



கவிப்பேரரசு
**வைரமுத்து**

### ஆயுர்வேத மருத்துவத்தை மேம்படுத்த

# ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

## மக்களவையில் ஆ.மணி கேள்வி!

புதுடெல்லி, மார்ச் 18 -

கடந்த 3 ஆண்டுகளில் ஆயுர்வேதத்தை மேம்படுத்த ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு திட்டங்கள் ஏதேனும் ஒன்றிய அரசு பரிசீலனை செய்துள்ளதா? இருப்பின் அதன் விவரங்கள் என்ன?



கடந்த 3 ஆண்டுகளில் பாரம்பரிய மருத்துவ சூத்திரங்களை மேம்படுத்தி, நோய்களை கட்டுப்படுத்த ஒன்றிய அரசால் தமிழ்நாட்டில் அனுமதிக்கப்பட்டுள்ள அல்லது ஆதரவு அளிக்கப்பட்டுள்ள ஆயுர்வேத ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு திட்டங்களின் எண்ணிக்கை என்ன?

கடந்த 3 ஆண்டுகளில் ஆயுர்வேத ஆராய்ச்சி மற்றும் திறன் மேம்பாட்டிற்கான ஒன்றிய அரசால் தமிழ்நாட்டுக்கு ஒதுக்கப்பட்ட நிதி விவரங்கள் என்ன?

தருமபுரி மாவட்டத்தில் ஒன்றிய அரசின் கீழ் இயங்கும் ஆயுர்வேத அறிவியல் ஆராய்ச்சி கவுன்சில் (CCRAS) சார்பில் ஆராய்ச்சி மையங்கள், கூட்டு திட்டங்கள், கள ஆராய்ச்சி அலகுகள் ஏதேனும் நிறுவப்பட்டுள்ள்தா? அல்லது அது குறித்து ஏதேனும் திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளதா?

தருமபுரி நாடாளுமன்ற தொகுதியில் உள்ள தாவரங்களின் மருத்துவ குணங்கள் குறித்து அறிவியல் சரிபார்ப்பு, அது போன்ற புதுமையான ஆராய்ச்சியை ஊக்குவிக்க ஒன்றிய அரசால் கடந்த 3 ஆண்டுகளில் எடுக்கப் பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன? என்று ஆயுஷ் அமைச்சகத்தின் இணையமைச்சர் பிரதாப் ராவ் ஜாதவ்விடம் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி கேள்வி எழுப்பி உள்ளார்.

# வின்னர் ..!

ஏப்ரலில் ஒலிக்கும்
மந்திரங்கள்

எண்ணிச்
சொல்லும்
எந்திரங்கள்...


"எவரும் உமக்கு
நிகரில்லை"

அத்தனை
பேரும்
ரன்னர்...

அண்ணனே
நீ மட்டுமே
வின்னர்...

உழைத்ததில்
First cm

உச்சங்கள்
தந்ததில்
Best cm




உலகத்
தமிழினமே
வாழ்த்திட
2026ன் next cm

"முத்துவேல்
கருணாநிதி
ஸ்டாலின் எனும் நான்".

**என்னநாஞ் சொல்றது!**

**மருது அழகு ராஜ்**
கழக செய்தித் தொடர்புக் குழு
துணைத் தலைவர்

